# குணசித்திர நடிகர் எம். ஏகாம்பரம்

## ஆழ்ந்து முத்துக்கள் 141

**- தெளிவத்தை ஜோசப் -**

கொழும்பு கொட்டாஞ்சேனை சென். பெனடிக் கல்லூரியில் மாணவனாக இருந்த போதே பாடசாலை நாடகங்களுக்காக பயிற்சி பெற்றவர் ஏகாம்பரம்.

அமரர் வ.ராசையா அவர்கள் சென் பெனடிக்ட்சில் ஆசிரியராக இருந்த காலத்தில் பாடசாலை நாடகங்களில் தனது மாணவர்களை ஈடுபடுத்தினார். 1949ல் கல்லூரிக் கலைவிழாவில் மேடை ஏறிய மாஸ்டரின் நாடகத்தில் ஒரு நடிகனாக அறிமுகம் கொண்டவர், அமைதியான நற்பண்புகள் கொண்ட எம்.ஏகாம்பரம் என்ற ஒரு மாணவன்.

ஏகாம்பரத்தின் நடிப்பைச் சிறக்கச் செய்யும் சக்தியே அவருடைய அமைதியும் அடக்கமும் தான் என்பதை அவருடைய ஆசிரியர் ராசையா மாஸ்டர் அறிந்து வைத்திருந்தார். அவரிடம் பயின்ற மாணவர்கள் பலர் பின்னாட்களில் பெரும் அரங்கக் கலைஞர்களாகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. சென் பெனடிக்ட்ஸ் கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றத்தின் செயற்பாடுகளும் இலங்கை வானொலி இளைஞர் மன்றம் மூலம் வானொலி சிறுவர் நாடகங்கள், மற்றும் உரைகள் போன்ற வானொலி நிகழ்வுகளில் மாணவர்களைப் பங்குகொள்ளச் செய்தமை போன்றவை ராசையா மாஸ்டரின் பணிகள்.

அமைதியான நடிகர் எம்.ஏகாம்பரம் அவர்கள் இவைகளை அடிக்கடி நினைவு கூர்வதுண்டு.

கல்லூரிக்கு வெளியில் 1955ல் மேடையேறிய 'சிநேக பாசம்' என்னும் நாடகமே இவர் நடித்த முதல் நாடகம்.

அமரர் இக்னேஷியஸ் மொறைஸ் அவர்கள் தயாரித்து மேடையேற்றிய நாடகம் இது.

அதன் பிறகு 1956ல் எச்.எம்.பி. மோஹிதீன் அவர்கள் எழுதிய 'வாழும் தெய்வம்' என்னும் நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

எச்.எம்.பியின் நாடகம் இவருக்கு நல்லதொரு திருப்புமுனையாக அமைந்தது. அதன் பின் ஸ்ரீமான் கைலாசம் என்னும் நாடகத்தில் நடித்தார். இந்த நாடகத்தில் இவருடன் சேர்ந்து நடித்த எஸ்.எஸ். சந்திரன் தான் தமிழகம் சென்று தமிழ் திரையுலகில் நகைச்சுவை நடிகராகப் பிரபல்யம் பெற்ற எஸ்.எஸ். சந்திரன் என்பது குறிப்பிடத்தக்கது.

பிந்திய நாற்பதுகளில் கொழும்பின் தமிழ் நாடக உலகின் முன்னோடி என்றும் நாடகத் தந்தை என்றும் போற்றப்பட்ட 'ராஜேந்திரன் மாஸ்டரின் 'மனோராஞ்சித கான சபா' மூலம் அறிமுகமாகி பிரபலடைந்தவர்தான் எஸ்.எஸ். சந்திரன்.

ஜீவா நாவுகரசனின் 'தெய்வத்தின் தீர்ப்பு' எஸ்.பொவின் 'முறுவல்' போன்ற நாடகங்களில் தொடர்ந்து நடித்தார் ஏகாம்பரம்.

1973ல் பொரளை வை.எம்.பி.ஏ அரங்கிலும் தொடர்ந்து சரஸ்வதி மண்டபத்திலும் மேடையேறிய அந்தனி ஜீவாவின் 'அக்கினிப் பூக்கள்' நாடகத்தில் ஏகாம்பரம் நடித்தார்.

இந்த நாடகம் கொழும்பில், ஜோன் டி சில்வா அரங்கு, லயனல்வென்ட், லும்பினி மண்டபம், டவர் அரங்கு பம்பலபிட்டி கதிரேசன் என்று பத்துக்கு மேற்பட்ட தடவைகள் மேடையேறியுள்ளது. நடிகர்கள் மாறி மாறி பங்கேற்றுள்ளனர் என்றாலும் நாடகம் பலமுறை மேடை ஏற்றம் கண்டுள்ளது.

உதாரணத்துக்கு முதல் அரங்கேற்றத்தில் முக்கிய பாத்திரமேற்றிருந்த கலைஞர் ஸ்ரீ சங்கர் பின்னர் நடிக்கவில்லை. அவருடைய பாத்திரத்தில் பிறகு டீன்குமாரும், பிறகு மோகன் குமாரும் நடித்தனர். மூவருமே முக்கியமான அரங்கக் கலைஞர்கள் தான்.

1974ல் அந்தனி ஜீவாவின் 'தங்கப்பதக்கம்' நாடகம் கொழும்பு நவரங்ஹலா மண்டபத்தில் அரங்கேறியது. ஏ.ஈ. மனோகரன், சிதம்பரம், ஆகியோருடன் எம்.ஏகாம்பரம் அவர்களும் நடித்தார்.

1978ம் ஆண்டுக்குப் பிறகே ஈழத்தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்துள்ளது.

புதிய காற்று படத்தைத் தயாரித்த வி.பி. கணேசன் அவர்கள் தனது இரண்டாவது படமான நான் உங்கள் தோழனின் படப்பிடிப்பு வேலைகளைத் தொடங்கியிருந்தார். படத்தின் டைரக்டர் எஸ்.வி.சந்திரனும் ஒளிப்பதிவாளர் வாமதேவனும் ஏகாம்பரத்தின் நெருங்கிய நண்பர்கள். இவர்களே தயாரிப்பாளர்கள் கணேசனுக்கு ஏகாம்பரத்தை அறிமுகம் செய்ததுடன் சிபாரிசும் செய்தனர். தயாரிப்பாளரும் ஏகாம்பரத்தின் சுபாவத்துக்கேற்ற பாத்திரமான ஒரு ஏழைக் குடியானவனின் பாத்திரத்தில் ஏகாம்பரத்தை நடிக்க வைத்தார். ஏகாம்பரம் அவர்களும் பாத்திரத்தை உணர்ந்து நடித்து வெற்றியடைந்தார். இவரது நடிப்பை பத்திரிகைகள் பாராட்டியிருந்தன.

மாத்தளை கார்த்திகேசு அவர்கள் ஏகாம்பரத்தின் நண்பர். தான் தயாரித்த 'அவள் ஒரு ஜீவ நதி' படத்தில் நண்பர் ஏகாம்பரத்துக்கு ஒரு முக்கியமான பாத்திரத்தை வழங்கி இருந்தார். 'அவள் ஒரு ஜீவ நதி' தோல்விப்படமாகி இருந்தாலும் ஏகாம்பரம் தோல்வி அடையவில்லை.

திரைப்பட இயக்குனரும் ஏகாம்பரத்தின் நண்பருமான எஸ்.வி.சந்திரன் 'எங்களில் ஒருவன்' என்னும் படத்தை தயாரித்தார். இது ஒரு முழு நீள நகைச்சுவைப் படம். இந்தப் படத்தில் கதாநாயகனின் தந்தைக்கான முக்கிய பாத்திரம் ஏகாம்பரத்தினுடையது. நகைச்சுவை நடிகர் டொன் பொஸ்கோ தான் கதாநாயகன். நெய்னார், ஜவாகர், செல்வசேகரன், லத்தீப் ஆகியோர் மற்றைய நடிகர்கள் 1979ல் திரைக்கு வந்த படம் இது.

கணேஷ் பிலிம்சாரின் மூன்றாவது படம் 'நாடு போற்ற வாழ்க' வி.பி.கணேசன் கதாநாயகன். சிங்களத்தின் முக்கிய நடிகைகளான சுவர்ணாமல்லவராய்ச்சியும், கீதா-குமாரசிங்கவும் இரட்டைக் கதாநாயகிகள், ஒரு கதாநாயகி கீதாவின் தந்தையாக ஏகாம்பரம் நடித்தார்.

பெரும்பாலான மேடை நடிகர்களை திரையுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர் வி.பி.கணேசன் அவர்கள். இந்தப் படத்திலும், ஏகாம்பரம், லத்தீப், கே.எஸ். பாலச்சந்திரன், செல்வசேகரன் மரிக்கார் ராம்தாஸ், டொன் பொஸ்கோ மணிமேகலை, சிதம்பரம் என்று நிறையவே மேடை நடிகர்கள் பங்கேற்றுள்ளனர்.


சிங்கள திரையுலகின் முன்னணி இயக்குனர் யசபாலித்த நாணயக்கார இயக்கிய நாடு போற்ற வாழ்க 1981ல் வெளியிடப்பட்டது.

'எனக்கென்று ஒரு உலகம்' படத்திலும் ஏகாம்பரம் ஒரு முக்கிய பாத்திரமேற்று நடித்தார். ஆனாலும் 1983ன் ஆடிக் கலவரத்தில் இந்த படம் தீக்கிரையாகிவிட்டது.

இலங்கை தொலைக்காட்சி வரலாற்றில் எம். ஏகாம்பரம் அவர்கள் நடித்த ஒரே தொலைக்காட்சி நாடகம் ஜெயினுல் ஆப்தீன் தயாரித்த 'ஆகாயப்பந்தல்' மட்டுமே.

ஆரவாரங்கள் ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி மிக அமைதியாக தனது குணச்சித்திர நடிப்பின் மூலம் தான் ஏற்ற பாத்திரங்களுக்கு உயிரூட்டிய நடிகர்
எம்.ஏகாம்பரம் அவர்கள்.





theliwathai.joseph@thaiveedu.com

## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**